**STARTING TIME 12.07 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**IA. No. 31/2019 in O.S. No. 171/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court on 27.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பூபதி Father's Name : பக்தவச்சலு நாயுடு

Address : ஆயர்பாடி கிராமம், நெமிலி வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 39

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இம்மனுவில் நான் 7-ம் மனுதாரராக உள்ளேன் என்றால், சரிதான். 1-ம் மனுதாரர் ஆனந்தா என்பவர் யார் என்றால், எனது அம்மா ஆவார். 2 முதல் 6 வரை எதிர்மனுதாரர்கள் எனது உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் என்றால், சரிதான். 4-ம் மனுதாரர் லட்சுமி எனது மூத்த சகோதரி என்றால், சரிதான். அவர் உயிருடன் உள்ளாரா என்றால், இல்லை, காலமாகிவிட்டார். அவருக்கு குழந்தைகள் உள்ளார்களா என்றால், உள்ளார்கள். அவரது வாரிசுகளை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால், சரிதான். இம்மனுவில் அவர்களை எதிர்மனுதாரர்களாக சேர்க்கவில்லை

என்றால், சரிதான்.

2. இம்மனுவை 04.11.2019 அன்று தயாரித்து, 05.11.2019 அன்று தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லியவாறு தான் உள்ளதா என்றால், ஆமாம்.

3. இவ்வழக்கு சொத்தை அசல் வழக்கின் 11–ம் பிரதிவாதி 16.07.2018 அன்று கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். அவர் கிரையம் பெற்ற பிறகு, அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க நாங்கள் இ.ம.வ. எண். 235/2018 என்ற மனுவை தாக்கல் செய்தோம் என்றால், சரிதான். அம்மனுவுடன், அவர் கிரையம் பெற்ற சொத்தில் கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இ.ம.வ. எண். 236/2018 என்ற மனுவையும், அவர் கிரையம் பெற்ற சொத்தை வேறு யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என இ.ம.வ. எண். 237/2018 என்ற மனுக்களையும் தாக்கல் செய்தோம் என்றால், சரிதான். மேற்படி 3 மனுக்களையும் நாங்கள் 23.07.2018 அன்று தான் தாக்கல் செய்தோம் என்றால், சரிதான்.

4. மேற்படி இ.ம.வ. எண். 236/2018 மற்றும் இ.ம.வ. எண். 237/2018 மனுக்களை தாக்கல் செய்த தினத்தன்று இடைக்கால உத்தரவு எதுவும் பிறப்பிக்காமல், அறிவிப்பு மட்டும் தான் அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால், சரிதான். மேற்படி 3 மனுக்களிலும், இருதரப்பையும் கேட்டு கடந்த 24.10.2018 அன்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்றால், சரிதான். எனவே, எதிர்மனுதாரர் தாவா சொத்தை கிரையம் பெற்ற 16.07.2018 தேதியில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 24.10.2018 தேதி வரை

மேற்படி மனுக்களில் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால், சரிதான்.

5. நாங்கள் தாக்கல் செய்த மனுவுடன், தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும், எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் மனு சொத்தில் கட்டுமானம் எதுவும் செய்யக்கூடாது என இ.ம.வ. எண். 237/2018 என்ற மனுவில் தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

6. மனு சொத்தை எதிர்மனுதாரர் 16.07.2018 அன்று கிரையம் பெற்ற உடனே கட்டுமானம் செய்ய ஆரம்பித்துவிட்டார் என்றால், சரிதான். அந்த கட்டுமானத்தை அவர் சுமார் ஒரு மாத காலத்திலேயே முடித்துவிட்டு, மின்இணைப்பும் பெற்றுக் கொண்டார் என்றால், சரிதான். அவ்வாறு கட்டப்பட்ட கட்டிடத்தை எதிர்மனுதாரர் வெளி நபர்களுக்கு வாடகைக்கும் விட்டுள்ளார் என்றால், சரிதான். எனவே, இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் உத்தரவு பிறப்பித்த பிறகு தான் எதிர்மனுதாரர் நீதிமன்ற உத்தரவை மீறி கட்டுமானம் கட்டினார் என்றும், அவரை நீதிமன்ற உத்தரவு மீறிய காரணத்திற்காக தண்டிக்கப்பட வேண்டும் என தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கும், மற்ற மனுதாரர்களுக்கும் எவ்வித உரிமையும் இல்லாததால் அசல் வழக்கே நிலைக்கதக்கதல்ல என்ற நிலையில், இம்மனுவும் நிலைக்கதக்கதல்ல என்பதால் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக

தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர்கள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 12.32. P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2025.11.27 17:06:33 +0530